14.06.2018

**Name: Sivalingam OS. 170/2015 PW1**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை.,**

வீரபோயன் எப்பொழுது காலமானார் என்றால் 31.03.1982 -ல். அதற்குண்டான ஆதாரத்தை தாக்கல் செய்துள்ளேன் அவருக்கு 3 ஆண்பிள்ளைகள். அதில் ஒருவர் பெயர் பெத்தபோயன், கைலாசம், மற்றும் வி.கிருஷ்ணன் ஆகும். பெண் மக்கள் யாரும் இல்லை. மேற்படி வீரபோயனுக்கு 3 ஆண் மக்கள் மட்டுமே வாரிசுகள் என்று காண்பிக்க ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். என்ன ஆதாரத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வட்டாட்சியரிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அறிக்கை பெற்று தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.12 ஆகும். வா.சா.ஆ.12 ஆவணத்தில் நான் சொல்வது போல் வீரபோயன் என்பவருடைய வாரிசுகள் யாரென்று சொல்லவில்லையென்றால் ஆமாம். வீரபோயனின் இறப்பிற்கு பின்னிட்டு அங்காயம்மாள் தான் அவரது சொத்தை அனுபவித்து வந்தார் என்று காண்பிக்க ஆதாரம் உண்டா என்றால் அங்காயம்மாள் பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும் வா.சா.ஆ. 3 ஆவணத்தில் மேற்படி வீரபோயன் சொத்தை அங்காயம்மாள் அனுபவித்து வந்ததாக எந்த குறிப்பும் இல்லையென்றால் சரியல்ல. அங்காயம்மாளின் மகன் கிருஷ்ணன் 1969 ஆம் ஆண்டிலிருந்து காணாமல் போய்விட்டார் என்று காண்பிக்க காவல் நிலையத்தில் புகார் எதாவது கொடுத்தேனா என்றால் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை ஆனால் வட்டாட்சியரிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விவரம் கேட்டுள்ளேன். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் வா.சா.ஆ.12 ஆவணத்தில் அவ்வாறு குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கிருஷ்ணன் தொடர்ந்து 7 ஆண்டுகாலமாக எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லையென்பதால் அவரை சட்டப்படி இறந்துபோன நபராக கருதி உத்தரவு பிறப்பிக்க நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி கிருஷ்ணன் காணாமல் போய்விட்டார் என்று புகார் எதுவும் கொடுக்கவில்லை. திருப்பத்தூர் சார்பதிவாளர் போலியான ஆவணங்கள் தயாரித்துவிட்டார்

என்று காண்பிக்க அவருக்கு எதிராக அவரது மேல் அதிகாரிகளுக்கு புகார் எதாவது கொடுத்தேனா என்றால் காவல் துறை அதிகாரிக்கு புகார் அனுப்பினேன். மேற்படி போலியான ஆவணம் தயாரிக்கப்பட்டது என்பதால் அதை ரத்து செய்ய சட்ட நடவடிக்கை எதாவது எடுத்தேனா என்றால் மேற்படி சொத்தானது எனக்கு பிறப்பிலேயே உரிமையுள்ளதால் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன். தனியாக சட்ட அறிவிப்பு எனது உரிமையை காண்பிக்க கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி சட்ட அறிவிப்பை இந்த தாவாவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2-ம் பிரதிவாதி கிருஷ்ணனுக்கும் 3 பிரதிவாதிக்கும் என்ன உறவுமுறை என்றால் இருவரும் உறவினர்கள் அல்ல அவர்கள் இருவரும் யாரென்று தெரியாது சார்பதிவாளர் கொடுத்த கடிதத்தின் படி 3 -ம் பிரதிவாதியை வழக்கில் சேர்த்துள்ளேன். 17.01.1991 ஆவணம் செல்லத்தக்க ஆவணம் என்று நீதிமன்றத்தில் விளம்புகை பரிகாரம் எதாவது கேட்டுள்ளேனா என்றால் அதை ரத்து செய்யத்தான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 17.01.1991 ஆவணம் பதிவு செய்யப்பட்டதாக எப்பொழுது எனக்கு தெரியவந்தது என்றால் 11.10.2010 தேதியில் சார்பதிவாளர் அலுவலத்திலிருந்து சான்றிட்ட நகல் பெற்ற பின்புதான் தெரியவந்தது. 08.04.1991 மற்றும் 10.04.1991 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் 1 ஆம் பிரதிவாதிக்கு என்ன ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் அடமான ஆவணம் எழுதி கொடுத்ததாக 1ம் பிரதிவாதி வங்கி கடன் கொடுத்துள்ளார்கள். மேற்படி 1 ஆம் பிரதிவாதிக்கு அடமானபத்திரம் எழுதிக்கொடுத்ததாக எனக்கு தெரியவந்தது என்றால் 11.10.2010 . 2 மற்றும் 3 பிரதிவாதிக்ள் 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த ஆவணம் போலியான ஆவணம் என்று யார் சொல்லி தெரியும் என்றால் 11.10.2010 தேதியில் சான்றிட்ட நகல் பெற்ற பிறகு அதில் என் பாட்டி அங்காயம்மாள் அவரது மகன்கள் 2, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் அதில் கையெழுத்திடவில்லையென்று நான் தெரிந்துகொண்டேன். மேற்படி காவல் துறை தலைவருக்கு நான் அனுப்பியதாக கூறும் புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகல் தாக்கல் செய்யவில்லை ஆனால் புகாரை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் அட்டை தாக்கல் செய்துள்ளேன். 08.04.1991 மற்றும் 10.04.1991 தேதியிட்ட ஆவணங்களை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் போலியான ஆவணங்கள் என்று எத்தனை ஆண்டுகள் கழித்து தாவா தாக்கல் செய்தேன் என்றால் 11.10.2010 -ல் நகல்

பெற்று 06.06.2011 -ல் தாவா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வரியவன் மனுவானது திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். மேற்படி மனு அனுமதித்தபிறகு தான் இந்த தாவா கோப்பிற்கு எடுக்கப்பட்டது. அடமானப்பத்திரத்தின்நகலும் பொது அதிகாரப்பத்திரத்தின் நகலும் எந்த தேதியில் பெற்றேன் என்றால் 11.10.2010 -ல் பெற்றேன். காவல் துறை தலைவர் எனது புகாரின் பெயரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று எப்பொழுது தெரிந்துகொண்டேன் என்றால் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக என்னையோ சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் மற்றும் மற்ற நபர்களையோ காவல்துறையினர் விசாரிக்கவில்லையென்பதால் நான் உடனடியாக தாவா தாக்கல் செய்தேன் நான் பிஎஸ்சி படித்துள்ளேன். வேலைக்கு எதுவும் செல்லவில்லை. என் தகப்பனார்தான் 8 ம் பிரதிவாதி . அவர் உயிருடன் உள்ளார். அவரை நான் சாட்சியாக விசாரிப்பதில்லை. எதன் அடிப்படையில் 8 -ம் பிரதிவாதியான என் தகப்பனாரிடமிருந்து பொது அதிகாரம் எழுதி வாங்க வேண்டிய அவசியம் இல்லையென்றால் சொத்து எனக்கு பிறப்பிலேயே உரிமை இருப்பதால் சொ்த்தின் பெயரில் பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுக்க என் அப்பாவிற்கு அவசியம் ஏற்படவில்லை. சொத்தில் எனக்கு உரிமையுண்டு என்று அதிகாரம் படைத்த நீதிமன்றம் எனது உரிமையை விளம்புகை படுத்தியுள்ளதா என்றால் இல்லை பாகம் கேட்டுதான் இன்னொரு தாவா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பாகப்பிரிவினை தாவா இன்னும் நிலுவையில் உள்ளது. நானும் என் தகப்பனாரும் ஒரே வீட்டில் இருக்கிறோம் என்றால் இல்லை. நான் முதலில் குடியிருந்த வீட்டின் முகவரி செவ்வாத்துபுதூர் கிராமம் செவ்வாத்தூர் அஞ்சல் தற்பொழுதும் அதே கிராமத்தில்தான் உள்ளேன். நான் குடியிருந்த வீட்டிற்கு கதவு எண் மற்றும் தெரு பெயர் இல்லையா என்றால் கதவு எண் உண்டு தெரு பெயர் கிடையாது. கதவு எண் தாவாவில் குறிப்பிடவில்லையென்றால சாதாரணமாக கிராமத்தில் முகவரிக்காக கதவு எண் குறிப்பிடுவதில்லை. என் அப்பாவிற்கும் எனக்கும் விரோதம் எதுவும் இல்லை ஆனால் இந்த வழக்கு சம்மந்தமாக விரோதம் ஏற்பட்டது. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக எழுதி கொடுத்ததாக கூறும் ஆவணத்தை பற்றியோ தாவா சொத்து பற்றியோ என் அப்பாவிடம் கேட்டேனா என்றால் எனக்கு பிறப்பிலேயே உரிமை வந்துவிட்டது என்றால் கேட்கவில்லை. என் தகப்பனார் குடும்பத்திற்காக கடன் பெற்றால் அவரது கடனை அவரது மக்களும் தீர்க்க கடமைப்பட்டவர்கள் என்றால் என் அப்பா கடன் எதுவும் பெறவில்லை. என் அப்பாவிடம்கடன்

எதாவது பெற்றது குறித்து கேட்டானா என்றால் கேட்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. என் அப்பாவிடம்பொது அதிகாரப்பத்திரம் மற்றும் அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்தது பற்றி கேட்டேனா என்றால் என் அப்பாவிற்கும் எனக்கும் விரோதம் ஏற்பட்டதால் நான் கேட்கவில்லை. என் அப்பாவிற்கும் எனக்கும் விரோதம் ஏற்பட்டதாக முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அதனால்தான் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் அவர்களை நேரடியாக விசாரிக்கவிலல்ல தேவைப்பட்டால் நீதிமன்றத்தில சாட்சிகளாக விசாரிப்பேன். திருப்பத்தூர் சார்பதிவாளருக்கும் எங்கள் குடும்பத்தாருக்கும் எதாவது விரோதம் உண்டா என்றால் இல்லை. மேற்படி சார்பதிவாளரை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் ஆவணம் பதிவு செய்த சார்பதிவாளர் இறந்துவிட்ட காரணத்தினால் நான் பார்க்க இயலவில்லை. பொது அதிகாரப்பத்திரம் மற்றும் அடமானப்பத்திரத்தில் கண்டுள்ள சாட்சிகளை நான் விசாரித்தேனா என்றால் அவர்களை பிரதிவாதிகளாக தாவாவில் சேர்த்துள்ளேன். பொது அதிகாரப்பத்திரத்தை அங்காயம்மாள் , அவரது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் சேர்ந்து எழுதிக்கொடுத்ததாக கண்டுள்ளதா என்றால் இல்லை 2, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் எழுதி கொடுத்ததாகத்தான் கண்டுள்ளது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம்தான். மேற்படி பொது அதிகாரப்பத்திரத்தை எழுதிக்கொடுத்தவரையும் சாட்சிகளாக உள்ள நபர்களையும் நேரடியாக விசாரிக்காமல் எதன் அடிப்படையில் மேற்படி ஆவணம் போலியாக தயாரிக்கப்பட்டது என்று கூறுகிறேன் என்றால் என் தாத்தா காலமான பின்னிட்டு அவரது சொத்தையும் எனது பாட்டி அங்காயம்மாள் சொத்தையும் அவர் எங்கள் குடும்பத்தின் கூட்டு குடும்ப சொத்துக்களாக பாவித்து அனுபவித்து வந்தார். அதனால் என் பாட்டியும் அவரது குழந்தைகளும் யாரும் ஆவணத்தில் கையெழுத்து செய்யவில்லையென்பதால் அவ்வாறு சொல்கிறேன். போலீசார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையென்பதால் தனியாக குற்றிவியல் நீதிமன்றத்தில் புகார் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. சொத்தை நீதிமன்ற ஏலத்தில் வேறொரு நபர் எடுத்துவிட்டார் என்றால் ஆமாம் ஆனால் மேற்படி ஏலம் எடுத்தவர் சொத்தில் எங்களுக்கு இடையூறு செய்யக்கூடாது என்று உத்தரவு பெற்றுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் ஏலம் எடுத்தவர் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக்கொண்டார் என்றால் இல்லை. செர்த்தை ஏலத்தில் எடுத்த நபரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் பொது அதிகாரப்பத்திரம், அடமானப்பத்திரம் வேறு தேதியிலும் ஏலம்

2008-ம் ஆண்டிலும் நடந்துள்ளதால் ஏலம் எடுத்தவரை இந்த வழக்கில் சேர்க்கவேண்டிய முகாந்திரம் இல்லை. ஏல நடவடிக்கை முடிந்த வழக்கானது இந்த வழக்கை கட்டுப்படுத்தாது. தற்பொழுது ஏலம் எடுத்தவர் தான் தாவா சொத்தின் அனுபவ சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் இல்லை. இன்றைய தேதியில் தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் 2 ,7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. அடங்கலும் மேற்படி நபர்கள் பெயர்களில் உள்ளது.

1-ம் பிரதிவாதியின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.